
# திராவிடத்தால் வாழ்கிறோம்

848

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திரைக்கதை வசனம் கலைஞர் மு.கருணாநிதி


குமரன்தாஸ்

12

படங்கள் உதவி : ஞானம்

# ‘ராஜா ராணி’
# விதவை மறுமணத்தைப் பேசிய புரட்சிக் காவியம்!





**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

*1956 -ஆம் ஆண்டு நேஷனல் பிக்சர்ஸ் தயாரிப்பில், கலைஞரின் புரட்சிகரமான கதை வசனத்தில் திரைக்கு வந்து சமுதாய மாற்றத்திற்கு வித்திட்ட திரைப்படம் ‘ராஜா ராணி’. பின்னாளில் மிகப்பெரிய இயக்குனராகப் புகழ்பெற்று விளங்கிய ஏ.பீம்சிங் இயக்கியதுடன் எடிட்டிங்கும் செய்திருந்தார். திரைப்படத்தில் சிவாஜிகணேசன், பத்மினி, என்.எஸ்.கிருஷ்ணன், டி.ஏ.மதுரம், எஸ்.எஸ்.ஆர், அங்கமுத்து, ராஜசுலோசனா ஆகியோர் முக்கிய வேடமேற்று நடித்திருந்தனர்.*

*இத்திரைப்படத்திற்குள் கலைஞர் எழுதிய, ‘சேரன் செங்குட்டுவன்’, ‘சாக்ரடீஸ்’, ‘அகல்யா’, ‘படுக்கைப் புரட்சி’ என்கிற நான்கு நாடகங்கள் இடம் பெற்றன. அதில் சேரன் செங்குட்டுவனும், சாக்ரடீசும் முழுமையாக காட்சியாக்கப் பட்டுள்ளன. கலைஞரின் வசனமும் சிவாஜியின் நடிப்பும் சேர்ந்து இந்நாடகங்களை அழியாப் புகழ்பெற்றவையாக ஆக்கிவிட்டன. சமூகத் திரைப்படத்திற்குள் வரலாற்று நாடகங்களைப் புகுத்தி, அதன் மூலம் தமிழ் இன உணர்வையும், பகுத்தறிவுக் கருத்துகளையும் பரப்பும் இப்படியொரு உத்தியை கலைஞர்தான் தோற்றுவித்திருப்பார் என்று எண்ணத் தோன்றுகிறது.*

### படத்தின் கதை

*ராணியின் (பத்மினி) தந்தை ஞானக்கண்ணுவுக்கு (கே.துரைசாமி) எதிர்பாராமல் ஏற்பட்ட ஒரு விபத்தில் பார்வை பறிபோய்விடுவதால், வீட்டிலேயே முடங்கி விடுகிறார். அதனால், மகள் ராணி வேலைக்குச் சென்று சம்பாதித்து குடும்பத்தை நடத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. வேறு வழியில்லாத காரணத்தால் ஞானக்கண்ணு மகளை வேலைக்குச் செல்ல அனுமதிக்கிறார். ஆனால், பூவும் பொட்டும் வைத்து அலங்கரித்துக் கொண்டு செல்லக் கூடாது என்கிற கட்டுப்பாடுடன் வேலைக்கு அனுப்புகிறார்.*

*வேலை தேடிச் செல்லும் ராணி, கீதா நாடக மன்ற உரிமையாளர் பாபுவிடம் (எஸ்.எஸ்.ஆரிடம்) வேலை கேட்கிறாள். அவன் ராணியிடம் உனக்குப் பாடத் தெரியுமா? என்று கேட்டுவிட்டு, நாடக டிக்கெட் விற்பனையாளர் வேலையை வழங்குகிறான். ‘சேரன் செங்குட்டுவன்’ நாடகம் காண மக்கள் கூட்டம் அலைமோதுகிறது. 1956 கால வழக்கப்படி, ராணி பாடல் பாடி, டிக்கெட் விற்பனை செய்கிறாள். இரண்டாயிரம் ரூபாய்க்கும் மேல் டிக்கெட் விற்று அரங்கு நிறைந்து (House full) விடுகிறது.*

*டிக்கெட் பணத்தைத் திருட திட்டமிடும் மூன்று சண்டியர்கள், தூக்கமருந்து கலந்த தேநீரை ராணியிடம் பாபு கொடுத்ததாகச் சொல்லிக் கொடுக்கின்றனர். தேநீரைக் குடித்துவிட்டு தூக்கக் கலக்கத்தில் இருக்கும் ராணியிடம் வந்து பாபு வரம்பற்ற வகையில் பேசி, தனது இச்சையை வெளிப்படுத்துகிறான். அதனால் கோபமடைந்த ராணி அங்கு இருந்து வெளியேறுகிறாள். ஆனால், தூக்க மருந்தின் தாக்கத்தினால், நாடக அரங்கத்தின் வெளியே நிற்கும் ஒரு காரின் உள் ஏறிப்படுத்து உறங்கி விடுகிறாள்.*

*நாடகம் சிறப்பாக நடைபெறுகிறது. சேரன் செங்குட்டுவனாக ராஜாவும் (சிவாஜியும்) அரசி வேண்மாளாக கீதாவும் (ராஜசுலோசனாவும்) நடித்து கைதட்டல் பெறுகின்றனர். இறுதியில் உள்ளூர் பெரிய மனிதரும் பாபுவின் அக்காள் சாந்தம்மாவின் (டி.ஏ.மதுரம்) கணவருமான சமரசம் (என்.எஸ்.கே) நாடகத்தையும் ராஜாவையும் பாராட்டிப் பேசுகின்றார். நாடக அரங்கில் இருந்து வெளிவரும் ராஜா தனது காரில் ஏறி வீட்டிற்கு வருகிறான். காரில் இருந்து இறங்கும் போதுதான் காரின் பின் இருக்கையில் ஒரு பெண் படுத்து உறங்கிக் கொண்டிருப்பதைக் கவனிக்கிறான்.*

*அவளைக் கீழே இறங்கச் சொல்கிறான். ஆனால், அவளுக்கு உறக்கம் கலைந்த பாடில்லை. அதனால் அவளைத் தனது வீட்டில் உறங்க வைக்கிறான். எதார்த்தமாக அன்றைய நாளிதழைப் பார்க்கிறான் அதில் லீலா எனும் பணக்காரப் பெண் வீட்டை விட்டு ஓடி வந்து விட்டதாகப் போட்டிருப்பதைப் பார்த்து, இவள்தான் அந்த லீலா என்று தவறாக நினைத்துக் கொண்டு, பொழுது விடிந்தவுடன் அவளை நன்கு, உபசரித்து வீட்டுக்கு காரில் கொண்டு போய் விடுவதாகச் சொல்கிறான். ராணி, வழியில் உள்ள ஒரு பங்களாவைக் காட்டி அதுதான் தனது வீடு என்று பொய் சொல்லி இறங்கிக்கொள்கிறாள்.*

*மறுநாள் வேலை தேடிச் செல்லும் ராணி, ராஜா எலக்ட்ரிக்கல்ஸ் எனும் கடையினுள் சென்று வேலை கேட்கப்போகிறாள். அங்கு அக்கடையின் உரிமையாளராக ராஜா அமர்ந்திருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைகிறாள். ஒருவாறு சமாளித்து, அவனிடமே தட்டச்சர் வேலைக்குச் சேர்ந்து விடுகிறாள்.*

### புதிய நாடகக் குழு

*நாடக மன்ற உரிமையாளர் பாபுவுடன் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக, ராணியை இணைத்துக் கொண்டு ராஜா தனியாக நாடகம் அரங்கேற்றுகிறான். ராணி ஏழை ஞானக்கண்ணுவின் மகள் என்பதை ராஜா தெரிந்துகொண்ட பின்பும் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான் ராஜா. ஆனால், ராணியின் தந்தை தனது குடும்பத்திற்கு தீராத அவமானம் வந்து சேர்ந்து விட்டதாகக் கொதிக்கிறார். ராணிக்கு (நமக்கும்) ஒன்றும் புரியவில்லை. அவள் ஒரு விதவை என்றும், அவள் சிறுமியாக இருந்தபோதே அவளது முறைப்பையனான பாஸ்கரனுடன் பால்ய விவாகம் நடந்து சில நாள்களிலேயே அப்பையன் இறந்து விட்டதாகவும் சொல்கிறார். அதனால்தான் ராணியைப் பூவும் பொட்டும் அணிய விடாமல் தடுத்து வந்ததாகவும், ராணியின் வாழ்வில் திருமணம் என்கிற பேச்சுக்கே இடமில்லை என்றும் சொல்கிறார்.*

*இந்த உரையாடலை மறைந்து நின்று கேட்டுவிடும் பாபு, உடனே ராஜாவிடம் சென்று சொல்லிவிடுகிறான். தனது கடைக்கு வரும் ராணியிடம் ராஜா கோபப்பட்டுப் பேசி, உறவைத் துண்டித்துக் கொள்கிறான். அதனால் மனம் உடைந்து வருந்தும் ராணியிடம் சென்று பாபு காதல் மொழி பேசுகிறான். ராணியோ, ‘ராஜாவே என்றும் தனது காதலன்’ என்று கூறி அவனை விரட்டுகிறாள். அதனால் கோபம் கொள்ளும் பாபு, ராஜாவைக் கொலை செய்யத் திட்டம் தீட்டி, சாக்ரடீஸ் நாடகத்தின் இறுதிக் காட்சியில் சாக்ரடீசுக்கு விஷம் கொடுக்கும் போது உண்மையான விஷத்தைக் கொடுத்து ராஜாவைக் கொன்றுவிட எண்ணி, அதனைக் கீதாவிடம் சொல்கிறான். அதே நேரம் ராணி, மனவருத்தத்தால், விஷம் அருந்திச் சாகத் துணிகிறாள்.*

*நாடகம் நடைபெறுகிறது. இறுதிக் காட்சியில் சாக்ரடீஸுக்கு மரண தண்டனை அளிக்கப்பட்டு ஒரு கோப்பையில் பால் வழங்கப்படுகிறது. அதில் உண்மையான விஷத்தை பாபு கலந்து விடுகிறான். சாக்ரடீஸ் அதனைக் குடிக்க முற்படும் போது ‘நிறுத்து’ என்று சத்தம் கேட்கிறது. நாடகத்தில் ஒன்றிப் போய் உணர்ச்சிவசப்பட்ட சமரசம் எழுந்து மேடைக்கு ஓடிப்போய் விஷமுள்ள கோப்பையை சாக்ரடீஸிடமிருந்து பறித்து “அறிஞன் சாகக் கூடாது, சாக்ரடீஸின் விரோதியான மெலிட்டஸ்தான் சாகவேண்டும்’’ என்று சொல்லி, மெலிட்டஸ் வேடமிட்டுள்ள பாபுவிடம் கோப்பையைக் கொடுத்து ‘நீ குடி’ என்று வற்புறுத்துகிறார்.*



*அப்போது கீதாவின் அம்மா ஓடி வந்து “ஐயோ அது உண்மையான விஷம். ராஜாவைக் கொல்ல பாபு கலந்து வைத்தது. அதனைக் குடித்தால், பாபு இறந்து விடுவான்”என உண்மையைச் சொல்லிவிடுகிறார். போலீஸ் விசாரித்து பாபுவைக் கைது செய்கிறது. இதற்கிடையில், விவரம் அறிந்து ராணி காப்பாற்றப்படுகிறாள். ராணியின் அப்பா மனம் மாறுகிறார். ராஜாவுக்கும் ராணிக்கும் திருமணம் நடைபெறுவதுடன் படம் நிறைவடைகிறது.*

**...காட்சி விரியும்**

> **“தமிழ் இன உணர்வையும், பகுத்தறிவுக் கருத்துகளையும் பரப்பும் இப்படியொரு உத்தியை கலைஞர்தான் தோற்றுவித்திருப்பார்!”**

## முட்டாள்தனத்தின் உச்சம்!

பெகல்ஹாமில் நடந்த தீவிரவாதத் தாக்குதலுக்குப் பிறகு, ‘சிந்தூர்’ எனப் பெயரிட்டு, பாகிஸ்தான் மீது பதிலடித் தாக்குதல் நடத்தியது இந்திய ராணுவம். நாடெங்கும் பல மாநிலங்களில் மோடியின் படத்துடன் ‘சிந்தூர்’ என பதாகை வைத்து, விளம்பரம் செய்துகொண்டது பாரதிய ஜனதா கட்சி. என் உடம்பில் ஓடுவது ரத்தமே இல்லை, ‘சிந்தூர்’ என்றெல்லாம் பேசினார் மோடி.

ஆனால், இத்தகைய அரசியல் விளம்பர முயற்சிகளே பரவாயில்லை. ஹைதராபாத்தில் ‘கராச்சி பேக்கரி’ என்ற பெயர்கொண்ட பேக்கரியின் பெயரை மாற்றச் சொல்லி, பா.ஜ.க.வினர் ரகளையில் ஈடுபட்டனர். பேக்கரியின் உரிமையாளரே பா.ஜ.க.வைச் சேர்ந்தவர்தான் என்று செய்திகள் வந்தன. அந்த வரிசையில் இப்போது, ராஜஸ்தானில் பேக்கரி ஒன்று ‘மைசூர்பாக்’ என்பதை ‘மைசூர் ஸ்ரீ’ எனப் பெயர் மாற்றியுள்ளது.

‘மோதி பாக்’ என்பதை ‘மோதி ஸ்ரீ’ என்றும், ‘கோண்ட் பாக்’ என்பதை ‘கோண்ட் ஸ்ரீ’ என்றும் பெயர் மாற்றியுள்ளனர்.

“பாக்’ என்றால் பாகிஸ்தானை குறிக்கிறது. அதனால், வாடிக்கையாளர்கள் மனது புண்படுகிறது. அதனால் மாற்றிவிட்டோம்” என்று கடை நிர்வாகம் விளக்கம் தருகிறது. ‘இது முட்டாள்தனத்தின் உச்சம், அப்படியென்றால் சேப்பாக்கம் என்பதை ‘சேப்ஸ்ரீக்கம்’ என்று அழைக்க முடியுமா? அல்லது பாகிஸ்தானை ஸ்ரீகிஸ்தான் என்று இனி அழைக்கப் போகிறீர்களா?’ என சமூக வலைதளங்களில் பலரும் விமர்சித்து வருகின்றனர்.

உண்மையில் ‘பாக்’ என்றால், கன்னடத்தில் ‘இனிப்பு’ என்று பொருள். மைசூர் இனிப்பு என்பதைத்தான் ‘மைசூர்பாக்’ என்று கூறுகிறோம். ஆனால், எல்லாவற்றையும் இந்துத்துவா கண்கொண்டு பார்த்து, முட்டாள்தனமாகச் சிந்திப்பது சமூக அமைதியைக் கெடுக்கும் ஆபத்தான போக்கு.

## ஃப்ளாஷ்பேக்



### தலைவர் நடத்தி வைத்த மணவிழா!



பேராசியர்
வா.மு.சே.ஆண்டவர்

19.05.1997 அன்று, அன்றைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையேற்று, சென்னை காமராசர் அரங்கத்தில் எனக்கும், வ.த.இராசகோபால் மகள் விமலாதேவி அவர்களுக்கும் மணவிழாவினை நடத்தி வைத்தார். உடன் எனது தந்தையார் பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன், நீதியரசர் மோகன், ஜப்பான் தொழிலதிபர் ஜெய்ஸ்ரீ மெகாவா உள்ளிட்டோருடன் எனது சகோதரர் வா.மு.சே.திருவள்ளுவர் ஆகியோர் உள்ளனர். அன்று தலைவரின் வாழ்த்துரை, மிக அற்புதமாக இருந்தது. தலைவரின் அன்பு வாழ்த்துகள் எங்கள் இல்லத்திலும், உள்ளத்திலும் என்றும் நிறைந்திருக்கும்.

**- பேராசியர் வா.மு.சே.ஆண்டவர், முதல்வர், கந்தசாமி நாயுடு ஆடவர் கல்லூரி, அண்ணா நகர், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### அமைதியான அறப்போரும் அடக்குமுறையும்...

1965-ஆம் ஆண்டு அமைதியாக நடந்து வந்த இந்தி எதிர்ப்பு அறப் போராட்டம், அடக்குமுறையால் திசை திரும்பியது. தடியடி, கண்ணீர்ப் புகைவீச்சுகளால் தமிழ்நாடு எங்கும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டது. ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். அடக்குமுறை கடுமையாக இருந்ததால், “இழைக்கப்படும் அநீதியை உலகறியச் செய்வதில் மாணவர் போராட்டம் வெற்றி பெற்றுவிட்டது. நேரடி நடவடிக்கையை நிறுத்தி வையுங்கள்” என மாணவர்களை வேண்டிக்கொண்டு அறிஞர் அண்ணா அறிக்கை விடுத்தார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131